இந்நூல்

*தமிழுக்காக இந்தியாவையோ இந்தியாவுக்காகத் தமிழையோ விட்டுத் தர விரும்பாமல் தவித்த சென்ற தலைமுறைத் தலைவர் ம.பொ.சி. யின் நினைவாக*

# இன்றும் தொடரும் தவிப்பு......

'தவிப்பு' தொடர்கதையாக 1998 ஏப்ரல் முதல் நவம்பர் வரை 'ஆனந்த விகடன்' இதழில் வெளியாயிற்று. சுமார் பத்தாண்டுகள் கழித்து இந்த நூலுக்கான அச்சு நகல்களை இப்போது வாசித்தபோது, அயர்ச்சியும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது.

அயர்ச்சிக்குக் காரணம் நம் சமூகத்தின் அரசியல் முதல் தனி மனித உறவுகள் வரை ஒவ்வொன்றைப் பற்றியும் இந்தக் கதையில் நான் பகிர்ந்து கொண்டிருக்கும் என் பார்வை இன்னமும் அர்த்தமுள்ளதாக இருப்பதுதான். மகிழ்ச்சிக்குக் காரணம் இப்படிப்பட்ட பார்வையை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள 'ஆனந்த விகடன்' எனக்குத் தொடர்ந்து இடம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது என்ற மன நிறைவுதான்.

உண்மையில் இந்தக் கதையை நான் முதலில் எழுதியது 1998-ல் அல்ல. 1990-ல்! என்னிடம் தொடர்ந்து அன்பு பாராட்டி வருபவர்களில் ஒருவரான 'ஆனந்த விகடன்' சேர்மன் எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், 'தேச ஒருமைப்பாடு பற்றி சிறுகதை எழுத

முடியுமா?' என்ற கேள்வி எழுந்தது. 'கதை எழுதும் முன்பாக தேச ஒருமைப்பாடு என்றால் என்ன என்பது பற்றி எனக்கு இருக்கும் கோட்பாட்டை உங்களுடன் விவாதிக்க வேண்டும்' என்றேன்.

'இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் வாழ்கின்றன. இவை அனைத்தும் தமது தனித்தன்மையை இழக்காமல் சமத்துவத்துடன் ஒன்று கூடி வாழ்வதே தேச ஒருமைப்பாடு; அதாவது தேசிய இனங்களின் சமத்துவக் கூட்டமைப்பே இந்திய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் என்றே நான் கருதுகிறேன்' என்று சொன்னேன். 'ஆனால், தற்போது தேசிய இனங்களிடையே சமத்துவம் இல்லை; தனி அடையாளங்களை மறுக்கிற மனோபாவம் இருக்கிறது. இந்த அணுகுமுறையே உண்மையில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது' என்றும் நான் சொன்னேன்.

'இந்தக் கருத்தை வைத்துக் கொண்டே கதை எழுத முயற்சியுங்களேன்' என்றார் அவர்.

'தேசம் என்பது வரைபடமல்ல!' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதித் தந்தேன். அவர் அதைப் படித்து விட்டு, 'கதை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இதை ஒரே இதழில் வெளியிடுவதானால், முழு விகடனும் தேவைப்படும்; தொடராக வெளியிட்டால், நான்கு வாரங்களில் முடிந்துவிடும். எனவே, இதை 26 வாரங்களாவது வெளியிட ஏற்றாற்போல விரித்து எழுதிக் கொடுங்களேன்' என்றார்.

17 வருடங்களில் இதழியல் எவ்வளவு மாறிவிட்டது பாருங்கள். இன்று, 26 வாரம் வரும் நீளத்துக்குக் கதை எழுதினால், இரண்டே பக்கத்தில் வெளியிட ஏற்ற மாதிரி சுருக்கிச் சின்னதாகத் தரச்சொல்லும் அணுகுமுறை வந்து விட்டது!

மேற்படி உரையாடல் நடந்த சில வாரங்களில், நான் அன்றைய விகடன் வெளியீடான 'ஜூனியர் போஸ்ட்' டின் பொறுப்பாசிரியர் பணியில் அமர்ந்தேன். ஓராண்டுக்குப் பின் அதிலிருந்து விலகி, தொலைக்காட்சித் தொடர்கள், செய்திப்படங்கள் தயாரிப்பு, 'தினகரன்' ஏட்டின் டி.வி. உலகம் ஆசிரியர் பணி, அடுத்து 'தினமணி' நாளேட்டின் இதழாசிரியர் பணி என்று வெவ்வேறு வேலைகளில் அடுத்த ஏழாண்டுகள் மூழ்கிப் போனேன்.

அந்த ஏழாண்டுகளில் ஆசிரியரோடு பேச நேர்ந்த ஒவ்வொரு முறையும் ஞாபகமாக 'அந்தக் கதையை எழுதிவிட்டீர்களா?' என்று கேட்பார். 1998 தொடக்கத்தில் அவரைச் சந்தித்தபோது, 'தேதி குறித்தால்தான் நீங்கள் எழுதுவீர்கள். இன்னும் மூன்று

மாதத்தில் தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழில் தொடங்குகிறோம்' என்றார். தொடங்கிவிட்டேன்.

விரித்து எழுதும் போது பல புதிய பாத்திரங்கள் தாங்களாகவே கதைக்குள் வந்துவிட்டார்கள். சுபாஷிணி, உமா, முரளி சண்முகவேலன் என்று பலரும் அப்படி வந்தவர்கள்தான். என் வாழ்க்கையின் சில முக்கிய தருணங்களைக் கழித்த செங்கல்பட்டு, மயிலாப்பூர் இரண்டும் உள்ளே வந்ததும் அப்படித்தான்.

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் அசாம், பஞ்சாப் மாநிலங்களில் நடந்த போராட்டங்களும் அவற்றை டெல்லி ஆட்சியாளர்கள் எதிர் கொண்ட விதமுமே இந்தக் கதைக்கு ஆதார நிகழ்ச்சிகள். அவற்றைத் தமிழ்ச் சூழலுக்குப் பொருந்துவதாக மாற்றி அமைத்துக் கற்பனை செய்திருக்கிறேன். கதையின் கடைசிப் பகுதியில் விஜயனுக்கு வேலு அனுப்பும் கடிதத்தில், ஈழப்போராளிகளில் ஒருவரான கோவிந்தன், 1985-ல் எழுதிய 'புதியதோர் உலகம்' நூலின் இறுதிப் பகுதியிலிருந்து சில வரிகளை, கருத்தைப் பிரதிபலிக்கிறேன். தமிழ்ச் சூழலுக்கேற்ப எழுதத் தேவைப்பட்ட பல தகவல்கள் ம.பொ.சி, முரசொலி மாறன், பழ.நெடுமாறன் ஆகியோரின் நூல்களிலிருந்து கிடைத்தன.

விகடனில் தொடராக இந்தக் கதை வெளியான போது, எனக்குக் கிடைத்த அனுபவங்களில் முக்கியமாகக் குறிப்பிட விரும்புபவை இரண்டு. ஒன்று, வழக்கமாகப் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும் பழக்கம் இல்லாத பல வாசகர்கள் இதற்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அரசியல் பற்றியும், பெண்கள் நிலை பற்றியும், ஆழ்ந்த அக்கறையும் கவலையும் தெரிவித்த கடிதங்கள் அவை.

இரண்டாவது முக்கியச் செய்தி, அரசியல் பிரச்சனைகள் சார்ந்து எழுதப்பட்ட இந்தக் கதையை நிறைய பெண்கள் கவனத்தோடு படித்தார்கள். 'இந்த மாதிரிக் கதைகளைப் பெண் வாசகர்கள் அதிகம் விரும்புவதில்லை என்று நிலவிவரும் கருத்து தவறானது' என்ற என் கருத்தை இது மெய்ப்பித்தது.

இந்தத் தொடர்கதை வெளியான பின்னர், விகடன் சார்பில் கார்கில் பகுதிக்கு யுத்த நேரத்தில் சென்று கண்டு எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது பஞ்சாப், அசாம் பிரச்னைகளைப் போலவே காஷ்மீர் பிரச்னையும் டெல்லி ஆட்சியாளர்களின் தவறுகளாலேயே பிரும்மாண்டமாகிக்கொண்டே போனது என்ற முடிவுக்கு வரவேண்டியிருந்தது.

'தவிப்பு' வெளியான பின்னர், டெல்லி அரசியல், மாநிலக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் கூட்டணி அரசியலாக மாறியிருக்கிறது.

ஆனாலும், எல்லா தேசிய இனங்களையும் சமமாக மதிக்கும் பார்வை இன்னும் வரவில்லை. மாநில சுயாட்சி பேசுபவர்கள் கூட சட்டீஸ்கர் முதல் மணிப்பூர் வரை ஆதிவாசிகளையும் விளிம்புநிலை மக்களையும் டெல்லி ஆட்சி நடத்தும் விதம் பற்றிக் கண்டுகொள்வதே இல்லை.

கனமான, சிக்கலான, ஆழமான விஷயங்களை எளிய மொழியில் வெகுஜன வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற என் மாறாத நம்பிக்கைக்கு இன்னொரு வாய்ப்பு அளித்த விகடன் சேர்மனுக்கு, இந்த நாவல், விகடன் பிரசுரமாக வெளிவரும் இந்தத் தருணத்தில் என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

என் கதைகளின் கலைத் தன்மை பற்றி மாறுபட்ட கருத்து கொண்டுள்ள போதும், தொடரை எழுதும் வேளையில் கூடவே நான் மேற்கொண்டிருந்த தொலைக்காட்சித் தொடர் தயாரிப்பு உள்ளிட்ட பல சுமைகளைப் பகிர்ந்து கொண்ட என் சிநேகிதி பத்மாவுக்கும், என்றேனும் ஒரு நாள் என் கதைகளைப் படிப்பான் அல்லது படமாக்குவான் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிற என் மகன் மனுஷ் நந்தனுக்கும், என் வேலைச்சுமையால் நான் கொடுத்த தொல்லைகளைச் சகித்தமைக்காக நன்றி.

'தவிப்பு' விகடனில் வெளிவந்து பல வருடங்களுக்குப் பிறகும் எங்கேனும் சந்திக்கும் ஏதோ ஒரு வாசகர், 'ஆனந்திக்கு அந்த முடிவுதான் வாய்த்திருக்க வேண்டுமா?' என்று கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார்.

இது நமக்கு வெளியே இருக்கும் அரசியல் பற்றிய நாவல் மட்டுமல்ல. நம் ஒவ்வொருவருக்கு உள்ளேயும் இருக்கும் வாழ்க்கையின் அரசியல் பற்றியுமான நாவல். உங்கள் தயக்கமற்ற விமர்சனம், என்னைத் தொடர்ந்து இயங்க செழுமைப்படுத்தும்.

அன்புடன்,

**ஞாநி**

gnanisankaran@gmail.com

சென்னை - 78,

ஆகஸ்ட், 2007.